தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

ஆனி 26, பிரஜோற்பத்தி—திருவள்ளுவர் ஆண்டு, 2022.

1991 ஜூலை 10, புதன்கிழமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் 9-30 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

"தேறற்க யாரையும் தேராது தேர்ந்தபின்
தேறுக தேறும் பொருள்."

யாரையும் ஆராயாமல் தெளியக் கூடாது. நன்றாக ஆராய்ந்த பிறகு, அவரிடம் தெளிவாகக் கொள்ளத்தக்க பொருள்களைத் தெளிந்து நம்ப வேண்டும்.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

1. தகவல் கோரல்

தமிழகக் கடலோரங்களில் குறிப்பிட்ட தூரம் வரைதான் மீன் பிடிக்கலாம் என்ற அறிவிப்பின் காரணமாக மீனவர்கள் பாதிக்கப்பட்டுள்ளது குறித்து.

*திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஜூலை மாதம் 5 ஆம் தேதி தமிழக அரசினுடைய தலைமைச் செயலாளர் அவர்கள் ஒரு அறிவிப்பு வெளியீடு செய்திருக்கிறார்கள். இலங்கைத் தமிழ்ப் போராளிகளின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தவும், இந்திய நாட்டின் பாதுகாப்புக் குறித்தும் அரசு எடுத்துள்ள நடவடிக்கையின் ஒரு கட்டமாக இலங்கை கடல் எல்லையின் முன் 5 கடல் மைல் தூரத்திற்கு மீன் பிடிக்க அனுமதிக்கப்பட மாட்டாது என்றும், இந்த உத்தரவு 8—7—1991 திங்கட் கிழமையிலிருந்து, தஞ்சை, புதுக்கோட்டை, சிதம்பரனார் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் அமலுக்கு வரும் என்றும் தெரிவித்து உள்ளார்கள். அரசு அனுமதித்துள்ள இந்த 5 கடல் மைலில் வெறும் சேறும், பாறையும் தான் இருக்கும்; மீன் பிடிக்கவே முடியாது என்ற கோரிக்கையினை வைத்து கடந்த மூன்று நாட்களாக இராமேஸ்வரத்தைச் சார்ந்த ஆயிரம் விசைப் படகுகளும், அந்த விசைப் படகுகளின் மூலமாக மீன் பிடிக்கின்ற 10 ஆயிரம் மீனவர்களும் அவர்களுடைய குடும்பங்களும் தொழில் இல்லாமல் முடங்கிக் கிடக்கிறார்கள்.

[திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்] [1991 ஜூலை 10

அது தவிர கடந்த ஒரு மாதமாக ஏறக்குறைய ஜூன் மாதம் 27 ஆம் தேதி அன்றும், ஜூலை 2 ஆம் தேதி அன்றும், ஜூலை 7 ஆம் தேதி அன்றும் இலங்கை கடற் படையினர் நமது மீனவர்களுடைய விசைப் படகுகளைச் சுட்டும், எரித்தும், இழுத்தும் சென்றிருக்கிறார்கள். நமது இராமேஸ்வரம் சட்டமன்ற உறுப்பினர் மரியாதைக்குரிய தென்னவன் அவர்கள் நேரே போய்க்கூட ஒரு படகினை மீட்டு வந்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில் அரசு குறுக்கிட்டு, அவர்கள் தொழில் நடத்துவதற்கு வழி செய்ய வேண்டும். 'கோஸ்ட் கார்ட்ஸ்' மேற்பார்வையிலே அடையாள அட்டை வழங்கப்பட்ட மீனவர்களை ஒரு குறிப்பிட்ட நேரத்திற்குள்ளாவது மீன் பிடிப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். நேற்று இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கூப்பிட்டுப் பேசுகிறபோது, அமரர் ராஜீவ் காந்தி அவர்களுடைய கொலை வழக்கிலே தேடப்பட்டு வருகின்ற கொலையாளிகளைக் கண்டு பிடிப்பதற்காகவும், அவர்கள் தப்பிச் சென்று விடுவதைத் தடுப்பதற்காகவுமே இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்றும் சொல்லியிருக்கிறார்கள். அதற்கான பூரண ஒத்துழைப்பை மீனவர்களும் தரத் தயாராக இருக்கிறார்கள். எனவே, இந்தச் சூழ்நிலையிலே அந்த 10 ஆயிரம் குடும்பங்களும் தொழில் நடத்துவதற்கு அரசு ஏற்பாடு செய்து, கடத்திச் செல்லப்பட்ட படகுகளைத் திரும்பவும் வழங்குவதற்கு நமது அரசு, இந்திய அரசுடன் தொடர்பு கொண்டு, இலங்கை அரசிடம் பேசி, அந்த 10 ஆயிரம் குடும்பத்தினருடைய துயர் துடைக்க நடவடிக்கை எடுக்குமா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதே பொருள் பற்றி திரு. சி. ஆண்டித்தேவர், திரு. வ. சத்தியமூர்த்தி, திரு. மு. தென்னவன் ஆகியோர் வேறு வேறு வகைகளில் என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். அவர்களும், இந்தப் பொருள்பற்றி அவையின் கவனத்திற்கு, இந்தப் பிரச்சினையை எழுப்பியதாகக் கருதுகிறேன்.

திரு. சி. ஆண்டித் தேவர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதே பொருள் குறித்து நானும் ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். நாங்களும் பேசியதாகக் கருத்தில் கொள்ள வேண்டுமென்று அவைத் தலைவர் அவர்கள் சொன்னார்கள். நானும் அந்தப் பொருள் குறித்துப் பேசுவதற்கு அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்கள் கருத்தைச் சொல்லுங்கள்.

9.35 மணி.

திரு. சி. ஆண்டித் தேவர் : மாண்புமிகு.பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மூன்று தினங்களாக இராமேஸ்வரம் மற்றும் கடற் பகுதிகளில் உள்ள மீனவர்கள் மீன்பிடிக்கச் செல்லாமல் இருக்கிறார்கள். நமது தலைமைச் செயலாளர்

கொடுத்த அறிவிப்பின் காரணமாக 5 மைல் தூரத்திற்கு அவர்கள் மீன் பிடிக்கச் செல்லலாம் என்ற ஒரு ஆணையின் காரணமாக இராமேஸ்வரத்தில் உள்ள மீனவர்கள் 5 மைல் தூரத்திற்குச் சென்றால் சேறும், தண்ணீரும்தான் இருக்கிறதே தவிர மீன் கிடைப்பதில்லை. ஆகவே, அவர்கள் 22 கிலோ மீட்டர் தூரத்திற்கு .முன்னால் இலங்கை-இந்திய அரசு ஒப்பந் தத்தின்படி கச்சத் தீவை தமிழக அரசின் ஒப்புதலோடு கொடுத் திருந்தாலும், கச்சத் தீவு வரை சென்று மீன் பிடித்தால்தான் மீன் கிடைக்கும் என்று கூறி இன்று 15 ஆயிரம் குடும்பங்கள் அங்கே மீன் பிடிக்கச் செல்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு வேறு தொழில் இல்லை என்பதனைக் கருத்திற் கொண்டு தமிழக அரசு இராஜீவ் காந்தி கொலையின் காரணமாகத் தேடப்படுகின்றவர்கள் இலங்கைக்குத் தப்பிச் செல்லக் கூடாது என்ற காரணத்திற்காக ஐந்து கிலோ மீட்டர் தூரம் என்று அறிவித்திருந்தாலும் அந்த மீனவர்களுக்கு அட்டை கொடுத்து அங்கு கடல் படையினர் சோதித்துக் கூட அவர்கள் 18 கிலோ மீட்டர் தூரம் செல்வதற்கு அனுமதிக்க வேண்டுமென்று தமிழக அரசை நான் கேட்டுக்கொள்கிறேன்.

புரட்சித் தலைவி அவர்கள் இதற்கு ஆவன செய்வதற்கு மத்திய அரசிடம் இந்த அவையினுடைய தீர்மானமாகத் தெரி விக்க தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டும். கச்சத் தீவு மறுபடியும் மீனவர்கள் அங்கே போய்த் தங்குவதற்கு வசதியாக இருப்பதற்கான ஒரு ஏற்பாட்டினைச் செய்ய வேண்டுமென்று இந்த அவையின் மூலமாக மாண்புமிகு தலைவரவர்களைக் கேட்டுக் கொண்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலில் நம்முடைய மீனவர்கள் மீன் பிடிப்பதற்கு ஒரு சில கன்டிஷன்கள், ஷரத்துக்கள் இப்பொழுது அறிவிக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆண்டித் தேவர் அவர்கள் பேசியதிலிருந்து அரசு உத்தரவை, அரசு ஆணையை அவர் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்பது தெரிகிறது.

ஐந்து கிலோ மீட்டர் தூரம் என்றும் குறிப்பிடவில்லை; ஐந்து மைல் தூரம் என்றும் குறிப்பிடவில்லை; என்ன குறிப் பிடப்பட்டிருக்கிறது என்றால், International Boundary Line எனப்படும், இலங்கைக்கும், இந்தியாவிற்கும் கடல் பகுதி யில் இடையே உள்ள எல்லை, 'International Boundary Line'-க்குள், ஐந்து 'nautical miles' தூரத்திற்குள் நமது மீனவர்கள் செல்லக் கூடாது என்றுதான் இருக்கிறது.

That is, they should not venture within 5 nautical miles of the International Boundary Line. இதுதான் அரசு ஆணையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. நம்முடைய மீனவர்களுக்கு நம்முடைய கடல் எல்லைக்குள் நம்முடைய territorial waters க்குள் மீன் பிடிப்பதற்கு எந்தவிதமான தடையும் இல்லை.

ஆனால் ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும். Our fishermen are permitted to fish within our territorial waters but not within the territorial waters of Sri Lanka. நம்முடைய கடற்படை சற்று நிதானமாக நடந்து கொள்கிறது. சற்றுக் கவனத்துடனும், எச்சரிக்கையுடனும் நடந்து கொள்கிறது. ஆனால் இலங்கையின் கடற்படை அப்படி இல்லை, Innternational territorial boundary lineஐக் கண்டு பிடிப்பது மிகவும் கடினம். மீனவர்கள் படகுகளில், கட்டு மரங்களில் மீன் பிடிக்கச் செல்லும்பொழுது, இந்தியாவின் கடல் எல்லை எங்கே முடிகிறது, இலங்கையின் கடல் எல்லை எங்கே ஆரம்பம் ஆகிறது என்பதை அவர்களால் சரியாகக் கணக்கிட முடிவதில்லை. எனவே, அவர்கள் தங்களை அறியாமல், தெரியாமலேயே இலங்கையின் கடல் எல்லைக்குள் புகுந்து விடுகிறார்கள். இலங்கையின் கடல் எல்லைக்குள் சற்றுத் தூரமே உள்ளே நுழைந்தாலும் கூட இலங்கையின் கடற்படை நம்முடைய மீனவர்களைச் சுடுகிறது, சுட்டுக் கொன்று விடுகிறது. அவர்களுடைய படகுகளைக் கைப்பற்றுகிறது. confiscate செய்கிறது. நம்முடைய மீனவர்களை கைது செய்கிறது. அவர்களுடைய படகுகளையும் வைத்துக் கொளுத்தி விடுகிறது. இத்தகைய எண்ணற்றச் சம்பவங்கள் நடைபெற்று இருக்கின்றன.

இப்படி நம்முடைய மீனவர்களுக்கு International boundary line எங்கே இருக்கிறது என்பதைப் புரிய வைக்க முடியவில்லை என்பதால்தான் international boundary line எங்கே இருக்கிறதோ அங்கிருந்து 5 nautical miles ஐந்து கடல் மைல் தூரத்திற்குள் நம்முடைய மீனவர்கள் செல்லக்கூடாது என்று தடை விதித்திருக்கிறோம்.

இதனுடைய நோக்கமே, நம்முடைய மீனவர்களின் உயிர்களையும், உடைமைகளையும் காப்பாற்ற வேண்டும்; அவர்களைப் பாதுகாக்க வேண்டும் என்பதால்தானே தவிர அவர்களுடைய தொழிலைப் பாதிக்க வேண்டுமென்ற எண்ணத்தில் அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, அரசினர் சட்ட முன்வடிவு.

திரு. எஸ். திருநாவுக்கரசு ; தலைவர் அவர்களே,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, இதிலே ஏதாவது எழுப்பலாம்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : ஸீரோ அவரிலே... ...

1991 ஜூலை 10] [பேரவைத் தலைவர்]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 'zero hour'-இல் என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்த பிறகு நீங்கள் எழுப்பினால் பரவாயில்லை. 'zero hour'-இல் எழுப்ப என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வர வேண்டும். ஏனென்றால் உங்களுக்குப் பதிலைப்பெற்றுத் தரவேண்டும் அல்லவா? எதுவுமே இல்லாமல் நீங்கள் திடீரென்று எழுந்தால் (குறுக்கீடு) 'zero hour' இல் எழுப்புவதற்கு ஏற்கனவே திரு. பீட்டர் அல்போன்ஸ் கேட்டார். திரு. ஆண்டித் தேவர் கேட்டார், அனுமதித்திருக்கிறோம்; பதில் வந்திருக்கிறது. எதுவுமே இல்லாமல் எழுந்திருந்தால் எப்படி?

9-40 மணி

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் என்னுடைய அனுமதியைப் பெற்றுத்தான் பேச வேண்டும். திடீரென்று எழுந்தால் எப்படி? உட்காருங்கள்.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் அதை என்னுடைய கவனத்திற்கு ஏற்கெனவே கொண்டு வந்திருந்தால் நான் உங்களை அனுமதிப்பேன். நீங்கள் உட்காருங்கள். நான் நிற்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் இருவரும் அமர்வது நல்லது. எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

*திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மற்ற விஷயத்திலே குறுக்கிடவில்லை. பேரவைத் தலைவர் நிற்கும்போது, அது தான் கடைசியாக பேரவைத் தலைவர் அவர்கள் பிறப்பிக்கின்ற ஆணை என்று கூட எடுத்துக் கொள்ளலாம். When he is on his legs all the members are expected to resume their seats நீங்கள் நின்று கொண்டு பேசிக் கொண்டிருக்கும்போது, ஒவ்வொரு முறையும் மற்ற உறுப்பினர்கள் எழுந்து நின்று கொண்டே பேசிக் கொண்டிருப்பது முறையாகாது. மூத்த உறுப்பினராக இருக்கின்ற அவர், ஏற்கெனவே இந்த அவையிலே துணை சபாநாயகராக இருந்திருக்கிறார். அமைச்சராகவும் இருந்திருக்கிறார். 4 முறை இருந்து, 5-வது முறையாக இந்த அவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். அவருக்கு நிச்சயமாக இந்த விதிமுறைகள் தெரிந்திருக்க வேண்டும். நீங்கள் அமர்ந்ததற்குப் பின்னால், பிரச்சினைகளை எழுப்ப வேண்டுமென்று நினைத்தால் எழுப்பலாம். அதிலே நான் குறுக்கிட விரும்பவில்லை. ஆனால், நீங்கள் நிற்கும்போது இந்த அவையிலே இருக்கின்ற அத்தனை உறுப்பினர்களும் புரிந்து கொள்ள வேண்டிய விஷயம், யாரும் எழுந்து நின்று பேசக் கூடாது என்கிற விதிமுறையைப் பின்பற்ற வேண்டுமென்று நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

[1991 ஜூலை 10

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அவை முன்னவர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் ஏதாவது ஒரு அவசர முக்கியத்துவப் பிரச்சினை பற்றி உடனடியாக எழுப்பி, அதற்காக அமைச்சரின் சார்பில் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டும் என்கிற நிலைமை இருக்குமேயானால், அவை கூடுவதற்கு முன்னால், பேரவைத் தலைவரிடத்திலே சென்று, அவருடைய அனுமதி பெற்று, அப்படிப்பட்ட அவசர முக்கியத்துவப் பிரச்சினையை எழுப்ப லாம், இப்போது மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்களும், திரு. ஆண்டித் தேவர் அவர் களும் எழுப்பியதைப் போன்று. அப்படி இல்லாவிட்டால்—விதிமுறைகளிலே, இன்ன விதிமுறையின் கீழ், இந்தக் கேள்வியை நான் கேட்க விரும்புகிறேன் ; அல்லது இந்தப் பிரச்சினையை எழுப்புகிறேன் என்று சொல்ல வேண்டும்—ஒவ்வொரு உறுப்பினரும் தானாக எழுந்து நின்று, ஒரு பிரச்சினையைப்பற்றி நான் கேட்கிறேன் என்று சொல்வது மரபல்ல—இந்த முறையை எல்லா உறுப்பினர்களும் கடைப்பிடிப்போமேயானால், இந்த அவையை மிக நல்ல முறையிலும், சீராகவும், செம்மை யாகவும் நடத்திச் செல்வதற்கு வழிவகை ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அவை முன்ன வரும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் தெரிவித்ததைப் போல, அவை தொடங்குகிற நேரத்தில், அல்லது கேள்வி நேரம் முடிந்து அவையின் ஏனைய அலுவல்கள் தொடங்குவதற்கு இடைப்பட்ட நேரத்தில், ஏதேனும் மிக இன்றியமையாத பிரச்சி னையை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வரவேண்டு மென்று விரும்புகிற உறுப்பினர்கள், என்னுடைய அறையிலே வந்து, அதுபற்றிய விவரத்தை என்னிடத்திலே சொல்லி, நான் இதை எழுப்ப விரும்புகிறேன் என்று சொன்னால், அதற்குரிய பதிலை நான் அரசினிடத்திலே பெற்று, நீங்கள் எழுப்பியவுடன், அதற்கான பதிலை அமைச்சரிடமிருந்து பெற்றுத் தருவதற்கு ஏதுவாக இருக்குமென்று நான் அந்த முறையைச் சொன்னேன். அந்த முறையை நான் ஏதோ புதுமையாகப் புகுத்துகிறேன் என்று கருத வேண்டாம். இது பாராளுமன்ற நடைமுறையிலே இருக்கிறது. நாள் தோறும், zero hour-ல் ஏதேனும் பிரச்சினையை எழுப்ப வேண்டுமானால், அவைத் தலைவரிடத் திலே வந்து, முன்கூட்டியே ஒரு மணி நேரத்திற்கு முன்னரே அதைப்பற்றிச் சொல்லிவிட்டு வரவேண்டுமென்று இருக்கிறது. ஒரு மணி நேரத்திற்கு உட்பட்ட நேரத்தில், அதாவது ஒரு 55 நிமிடத்திற்கு முன்னால் சொன்னால்கூட, அவருக்கு, பிரச்சி னையை எழுப்புவதற்கு அனுமதிப்பதில்லை. அது நடைமுறை யில் எங்கும் இருக்கிறது. இந்த அவையிலேகூட, அது பல்வேறு, சூழ்நிலைகளில் பழக்கமாக ஏற்படுத்தப்பட்டு வந்திருக்கிறது.

எனவே, இந்தப் பிரச்சினையை எழுப்ப விரும்புகிறேன் என்று முன்னரே சொல்லியிருந்தால், நான் அரசினுடைய கவனத்திற்கு அந்தப் பிரச்சினையைச் சொல்லி, உங்களுக்குப் பதில் பெற்றுத் தர முடியும். இன்றைக்கு இரண்டு பிரச்சினைகளை இரண்டு உறுப்பினர்கள் பேசியிருக்கிறார்கள். அனுமதி பெற்றுப் பேசினார்கள். நாளை முதல் ஏதேனும் பிரச்சினையை எழுப்ப விரும்பினால், என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தால் அதை அரசினுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று உங்களுக்கு பதில் பெற்றுத் தர முடியும்.

2. சட்ட முன்வடிவு—(அறிமுகம் செய்தல்)

தமிழ்நாடு நகராட்சிச் சட்டங்கள் சார்ந்த (திருத்த) சட்ட முன்வடிவு, 1991.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசினர் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்தல். தமிழ்நாடு நகராட்சிச் சட்டங்கள் சார்ந்த (திருத்த) சட்ட முன்வடிவு, 1991-ஐ அறிமுகம் செய்ய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அனுமதி கோருவார்கள்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிச் சட்டங்கள் சார்ந்த (திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

என்று கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.